ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1933/11 - 2015 සැප්තැම්බර් මස 21 වැනි සඳුදා - 2015.09.21
*1933/11 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### வடக்கு மாகாண மாகாண சபை

*2015 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, ஒதுக்கீட்டு (குறைநிரப்பு ஏற்பாடுகள்) நியதிச்சட்டம்*

வடமாகாண மாகாண சபையின் 2015 ஆம் நிதியாண்டுக்குரிய செலவினங்கள் விடயமாக கௌரவ ஆளுநரால் 2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 22 ஆந் திகதியில் அங்கீகாரம் வழங்கப்பட்ட செலவினத்துக்கு ஒரு குறைநிரப்பு ஏற்பாடாக முதலாவது பின்னிணைப்பில் இசைவுபடுத்தப்பட்ட நிதி ஏற்பாடுகளுக்குரிய விதிமுறைகளை ஏற்பாடு செய்வதும், அத்தகைய பணிகளின் போது நடப்பு வருட அனைத்து செலவினங்களின் தேவைகளுக்குமான மாகாண சபை நிதியத்திலிருந்தோ அல்லது மாகாண சபையினால் பிரயோகத்திற்கு எடுக்க முடியுமாகிய ஒரு சேமக் கையிருப்பு நிதியத்தினால் அல்லது நிதியங்களினால் முற்பணமாக கொடுப்பனவு செய்வதற்கு இடமளிக்கக்கூடியதும் மற்றும், மாகாண சபையின் திரட்டு நிதியத்திற்கு அப்பணத்தை மீளச் செலுத்துவதற்குமான விதிமுறைகளை ஏற்பாடு செய்வதும் அதனுடன் தொடர்புடைய அல்லது அவற்றிற்கு இடைநேர்விளைவான விடயங்களுக்கும் உரிய விதிமுறைகளை ஏற்பாடு செய்வதற்குமான நியதிச்சட்டம் இதுவாகும்.

வடக்கு மாகாண மாகாண சபையினால் இந்த நியதிச்சட்டம் பின்வருமாறு ஆக்கப்படுகின்றது:-

*சுருக்கப் பெயர்.*

1. இந்நியதிச்சட்டம் "2015 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க ஒதுக்கீடு (குறைநிரப்பு ஏற்பாடுகள்) நியதிச் சட்டம்" எனக் குறிப்பிடப்படும்.

*2015 ஆம் நிதி யாண்டுக்கான ஒதுக்கீடு குறை நிரப்பு ஏற்பாடுகள்.*

2. ஒரு தொகை நிதியை செலவு செய்வதற்கு அதிகாரம் அளிக்கப்பட்ட பிரிதொரு சட்டத்திற்கு பாதகம் ஏற்படாத வகையில் இந்த நியதிச்சட்டத்தில் நிதியாண்டு எனக் குறிப்பிடப்படும் 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் கால வரையறைக்குரிய செலவினங்களுக்கென 2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 22 ஆந் திகதியில் கௌரவ ஆளுநரால் அங்கீகாரம் வழங்கப்பட்ட செலவினங்களுக்கு மேலதிகமான ஒரு குறைநிரப்பு ஏற்பாடாக இந்நியதிச்சட்டத்தின் முதலாம் அட்டவணையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தொகை நூற்று நான்கு மில்லியன் தொள்ளாயிரத்து ஐம்பத்து ஏழு ஆயிரத்து நானூற்று எண்பத்து எட்டு ரூபா எழுபது சதம் (104,957,488.70 ரூபா) என்ற வரையறைக்குள் வடக்கு மாகாண மாகாண சபையின் செலவினங்களை,

(அ) வடக்கு மாகாண நிதிகளிலிருந்தோ அல்லது நிதி வகைகளிலிருந்தோ, அல்லது



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(ஆ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பு சரத்து 154 (ஆர்) இன் பிரகாரம் ஒதுக்கப்படும் நிதி மற்றும் இலங்கை அரசின் ஒதுக்கம் அல்லது கொடுப்பனவுகளில் இருந்து கொடுப்பனவு செய்தல்.

சீ. வீ. கந்தையா சிவஞானம்,
அவைத் தலைவர்,
வடக்கு மாகாண மாகாண சபை.

ம. ஜெகூ,
செயலாளர்,
பேரவைச் செயலகம்,
வடக்கு மாகாண மாகாண சபை.

10- 330/1

---

**வடக்கு மாகாண மாகாண சபை**

*2015 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, நிதி ஒதுக்கீட்டு (குறைநிரப்பு ஏற்பாடுகள்) நியதிச்சட்டம்*

2015 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, நிதி ஒதுக்கீட்டு (குறைநிரப்பு ஏற்பாடுகள்) நியதிச்சட்டம் வடக்கு மாகாண மாகாண சபையால் 2015 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 25 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டது என்பதும், அது வடக்கு மாகாண கௌரவ ஆளுநரால் 2015 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதி சம்மதமளிக்கப்பட்டுள்ளது என்பதும் இத்தால் அறியத்தரப்படுகின்றது.

ம. ஜெகூ,
செயலாளர்,
பேரவைச் செயலகம்,
வடக்கு மாகாண மாகாண சபை.

பேரவைச் செயலகம்,
ஏ 9 வீதி,
கைதடி,
2015, செத்தெம்பர் 18.

10- 330/2